# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **10.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | தஞ்சாவூர் (பொதுக்கூட்டம்) | திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை,பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் |
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.





கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு வெற்றிக் கூட்டணியின் திருவொற்றியூர் சட்ட மன்றத் தொகுதி வேட்பாளர் தோழர் எல். சுந்தரராஜன் அவர்களை ஆதரித்து எண்ணூர் தாழங் குப்பம் பகுதியில் பொதுமக்களிடம் வாக்கு கள் சேகரித்தார். இந்நிகழ்வில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர்கள் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன், தி.மு.தனியரசு, வட்டக் கழக செயலாளர் மு.சிவகுமார் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்

## கழக வேட்பாளர்களை ஆதரித்து தமிழ் மாநில தேசிய லீக் பிரச்சாரம்!

### திருப்பூர் அல்தாப் அறிக்கை!

சென்னை, ஏப்.9-

தமிழ்மாநில தேசியலீக் கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரம் செய்ய தமிழ்மாநில தேசியலீக் முடிவு செய்துள்ளது. தி.மு.க. வுடன் நீண்டநாள் தோழமையுடன் உள்ள நாங்கள் தியாக உணர்வுடன் கடமை ஆற்றிடுவோம்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் பாசிச மதவாத ஆர்.எஸ்.எஸ் கும்பல் எவ்விதத்திலும் தமிழ்நாட்டில் கால் ஊன்றவிடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளோம். மோடி, எடப்பாடி தலைமையிலான மதவாத கூட்டணியை தோற்கடிக்க சிறுபான்மையினராகிய தமிழ் மாநில தேசிய லீக் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாடு முழுவதும் தீவிரப் பிரச்சாரம் செய்கிறோம்.

இவ்வாறு தமிழ் மாநில தேசியலீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நடிகர் கருணாஸ் சிவகங்கை தெற்கு ஒன்றியம் பழமலை நகர் நரிக்குறவர் காலனியில் நேற்று வாக்கு சேகரித்தார் .அவருடன் சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் எம் ஜெயராமன் மற்றும் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றார்கள்.